திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Life Principles Demonstrated by the Righteous Path

**Dr. M. Tamilselvi**

**Assistant Professor, Department of Tamil, V.V.Vanniaperumal College for Women, Virudhunagar, India**

Manuscript ID : **MT422A0159**

Volume : **4**

Issue : **1**

Month : **March**

Year : **2024**

Received: 12.02.2024
Revised: 22.02.2024
Accepted: 11.03.2024
Published: 20.03.2024

Pages : 15-23

DOI: 10.5281/zenodo.10911339



**ABSTRACT:**

The way of righteousness, seeking knowledge, experiencing pleasure while avoiding pain, is the life principle taught by our ancestors. Accordingly, a person with high moral values is considered Tamil. Such a person elevates himself to the best of humanity by aligning his actions with his thoughts, displaying discretion and compassion by avoiding harmful behaviors and striving for excellence. Humans experience both pleasure and pain from a young age, making it easy for some to learn from experiences. Some people admire and value wealth; they are called the wealthy. Those who possess good qualities are considered wealthy even in poverty. If it is considered useful to benefit the wealthy, then it speaks of righteousness. Living for oneself while living for others, giving one's own wealth to others, is the noble quality taught by books like Thirukkural, which are considered guides to righteousness for the world. This book explains that true righteous living is helping others by understanding the principles of righteousness and assisting them.

**KEYWORDS:**

The Path of Righteousness, One Without Faults, A Saying that Brings Goodness, The World Revolves around Agriculture, Perseverance, Extreme Hunger, A Pot Made of Clay

# நல்வழி காட்டும் வாழ்க்கை நெறிகள்

**முனைவர் மா. தமிழ்ச்செல்வி**
*உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

**அற வழி நின்று, பொருளீட்டி, இன்பம் துய்த்து நேரிய வழியில் வாழ வேண்டும் என்பது நம் முன்னோர் கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடம். அதன்படி உயர்ந்த வாழ்வியல் பண்பு கொண்டவன் தமிழன். அவனிடத்தில் காணப்படும் சிந்தனைகளும் ஆற்றலும் குறிக்கோள்களை அடையும்படி தன் நடத்தையை அமைத்துச் செலுத்தும் ஒழுக்கமும் சிறந்த மனிதனாக உயர்த்துகிறது. மனிதன், வாழ்க்கையில் இளம் பருவத்திலிருந்தே இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கிறான். எனவே, எளிதாக அனுபவத்தின் மூலம் சிலவற்றைக் கற்றுக்கொள்கிறான். மனிதரில் சிலர் செல்வந்தரையே நேசிப்பர்; மதிப்பர். நற்குணங்கள் கொண்டோர் வறுமை நிலையில் இருந்தால் விலகியே செல்வர். செல்வர்களுக்கு அளிப்பது பயன்கருதிச் செய்வதாகலின் அது அறத்தை விலை பேசுவதாகும். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழும் இயல்புடையராய்த் தன்னிடம் உள்ள செல்வத்தைப் பிறர்க்குக் கொடுத்து வாழும் மகத்தான பண்பைத் திருக்குறள் வழிவந்த நல்வழிபோன்ற நூல்கள் உலகிற்கு எடுத்துரைக்கின்றன. இந்நூல்கள் கூறும் அறங்களை அறிந்து பிறர்க்கு உதவிசெய்து வாழ்தலே உண்மையான அறவாழ்க்கையாகும்.**

## கருச்சொற்கள்

**நல்வழி - இளையோர் அற நூல், மாசிலன் - குறுறமில்லாதவன், நலக்கோட்பாடு - நன்மை தரும் கோட்பாடு, ஏர்ப்பின்னது உலகம் - உலகம் உழவை (விவசாயத்தை) மையமிட்டு இயங்குகிறது, தாளாண்மை - முயற்சி, அழிபசி - மிகுந்த பசி, மண்கலம் - மணால் செய்யப்பட்ட பானை**

## முன்னுரை

அறக்கருத்துகள் தொடக்க காலத்திலிருந்தே சொல்லப்பட்டுள்ளன. எழுதப்படாமல் பழக்கமாக வந்து குறிப்பிட்ட காலத்தில் அவை நூல் வடிவம் பெற்றுள்ளன. அற நூல்கள் தனித்து உண்டானதற்குக் காரணம் சமூகத் தேவையே. மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுதற்கும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி உயர்த்துவதற்கும் மனிதன் ஆன்மீக விடுதலை பெறுவதற்கும் உதவுவதற்காகவே அற

இலக்கியம் படைக்கப்பட்டது. தமிழர் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். வாழ்க்கை நெறி முறைகளையும், நல்லொழுக்க விதிமுறைகளையும் அறிவுறுத்துவதில் முக்கியப் பங்குவகிக்கும் 'நல்வழி' நவிலும் அறவாழ்க்கை குறித்த கருத்தாக்கமே கட்டுரையின் நோக்கம்.

## அறம் - விளக்கம்

அறம் என்பதற்கு நீதி, தருமம், உதவி, நன்மை, ஈகை எனப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படுகிறது. பொதுவாக பிறருக்குத் துன்பம் செய்யாது, தம்மால் இயன்ற அளவு நன்மை செய்து வாழ்தலே அறம் எனலாம். மனத்தூய்மை தான் அறம் என்கிறார் வள்ளுவர். இதனை,

**"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்"** **(குறள்-34)**

என்ற குறள் அடி விளக்கி நிற்கிறது.

அறம் என்பதற்கு நர்மதாவின் தமிழ் அகராதி "அகம் மற்றும் புற வாழ்க்கை சீராக இயங்கிட ஒருவர் தாம் கடைப்பிடித்திடும் சமயம் சார்பான நெறிமுறைகள்" என்று விளக்கம் தருகிறது. (நர்மதாவின் தமிழ் அகராதி, 2002)[1]

## உழவின் பெருமை

உலகில் பல்வேறு தொழில் செய்யப்பட்டு வந்தாலும் உழவுத் தொழில் மிகவும் சிறந்த தொழிலாகும். "மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் குறைத்து, இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும்"[2] என்கிறது வாழ்வியற் களஞ்சியம். (வாழ்வியற் களஞ்சியம், 1994) எல்லாத் தொழிலையும் உழவுத் தொழில் இயங்க வைக்கிறது. ஏர்த் தொழில் இல்லையென்றால் ஏனைய தொழில் இயங்க முடியாது. உணவுப் பொருள் உற்பத்தி இல்லையென்றால் வேறு தொழில் செய்து மக்கள் வாழ முடியாது. மனித உறுப்புக்களில் தலை எவ்வளவு சிறந்ததோ அதைப் போல் தொழில்களில் உழவுத் தொழில் சிறந்ததாகும். தலையில் தான் அறிவும் அனைத்துவித உறுப்பும் நிறைந்து உடல் இயங்குகிறது. இதனை

**"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை."[3]** **(குறள்-1031)**

என்கிறார் திருவள்ளுவர்.

உழவர் ஒருவரையும் எதிர்பார்த்து வாழ்பவர் அல்லர். சுதந்திரமாகப் பயிர்செய்து, அதனால் கிடைக்கும் பொருளைகளை உண்டு வாழ்பவர். ஏனைய தொழில்

செய்பவரெல்லாரும் உணவுக்காக, உழவுத் தொழில் செய்வோரை எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது. எந்த நாட்டில் உழவு சிறப்பாக நடந்து உணவுக்கட்டுப்பாடு இல்லையோ, அந்த நாட்டைப் பிறநாடுகள் எல்லாம் உணவின் பொருட்டு எதிர்பார்ப்பது உறுதி.

ஒளிக்காது உழவுத் தொழில் செய்யும் சிறப்பை உடையவர், பிறரிடம் போய்த் தனக்கு ஒன்று வேண்டுமென்று கேட்கமாட்டார். மேலும் கேட்டவர்க்கு இல்லையென்னாது கொடுப்பர்.

உழவரது உதவி முற்றத் துறந்த முனிவருக்கும் தேவையானது. அறம் வளர வேண்டுமென்றால், உழவுத் தொழில் சிறப்புற வளர வேண்டும். ஆற்றின் ஓரத்தில் நிற்கின்ற மரமும், மன்னன் அறியும்படி அம்மன்னனின் அரண்மனையில் உயர்ந்த பதவியில் சிறப்புடனிருந்த உயர்வாழ்வும் எந்தச் சமயத்திலும் அழியக் கூடியன. உயர்வானது என்னவென்றால் சுயமாக உழுது பயிரிட்டு உண்டு வாழ்வதே. பிறரிடம் அடங்கிச் செய்கின்ற வேலைகளுக்கெல்லாம் குறைபாடு உண்டு. ஆனால் உழவுத் தொழிலுக்கு ஒப்பானது வேறொன்றில்லை என்று உழவுத் தொழிலின் உயர்வை ஔவையார் விளக்குகிறார்.

## பசி என்னும் பெருநோய்

மனிதன், மனிதனாக, மாமனிதனாக முழுவளர்ச்சி பெற்று வாழ மனிதநேயம் இன்றியமையாது தேவைப்படுகிறது. மனித இனத்தின் துன்பத்தையும், துயரத்தையும் நீக்கி, இன்பத்தையும், மகிழ்ச்சியையும் மலரச் செய்வது மனிதநேயம். மனிதநேயம் மலர்ந்தால் மனிதர்கள் நலமுடன் வளமுடன் வாழ்வர்.

பசியாவது உணவு வேட்கையாகும். வயிற்றுக்கு உணவு இல்லாமையால் உடலுக்கு நேரிடும் துன்பமே பசி. பசி வறுமையால் ஏற்படுகிறது. மிடி, இலம்பாடு, ஒற்கம் என்ற மூன்று சொற்களும் வறுமை எனப் பொருள்படும். பசி உடலை வருத்தும் தன்மையது. “அழிபசி வருத்தம்”[4] (இணைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார், 1953) என்ற சிறுபாணாற்றுப்படைத் தொடர் பசி, அறிவு முதலியவற்றை அழித்துப் பெரிதும் வருத்தும் என்பதைக் குறிப்பிடுகிறது. கடும்பசி நீடிக்குமாயின் உடல்வாடி மெலிவுற்று உயிரும் நீங்கும். ஆகையால் அதை நோய் என்பர். என்றும் பிறர் பசியைத் தீர்க்கும் சீரிய பண்புடையவனைப் புறநானூறு ‘பசிப்பிணி மருத்துவன்’ எனப் புகழ்கிறது.

வயிற்றில் உண்டாகும் பசி என்னும் கொடுமையைப் போக்குவதற்கு நாழியளவு அரிசியைப் பெறுவதற்காக நாமெல்லாம் பிறரை வணங்கியும், பிறரிடம் சென்று யாசித்தும், தெளிந்த நீரையுடைய சமுத்திரத்தைக் கடந்து சென்றும், பொய்யான பாவனை புரிந்தும் வாழ்கின்றோம்.

**“மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை**
**தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்**
**கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்**
**பசிவந் திடப்பறந்து போம்.”[5]** **நல்வழி-26**

என்று ஔவையார் பசியின் கொடுமையை விளக்கிக் கூறுகிறார்.

## வயிற்றுக்குச் சோறிடல்

அறங்களுள் உணவளித்தலையே சிறந்ததாகச் சான்றோர் கூறினர். பலர் உதவியால் வாழப் பிறந்த மனிதன், பலரோடு இருந்து பங்கிட்டு உண்ண வேண்டும். தனித்துண்ணக் கருதுதல் மிகமிகத் தாழ்மையான செயல்.

**“மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே.”[6]** **மணிமேகலை-11:95-96**

எனச் சீத்தலைச் சாத்தனார் பசி தீர்த்தலின் இன்றியமையாமையினையும் மேன்மையினையும் வற்புறுத்திக் கூறுகிறார்.

ஆற்று நீர் தான் ஓடுகின்ற பாதையில் ஏற்படுத்துகின்ற மேடும் பள்ளமும் மாறி மாறி அமைவது போல் மனிதனிடத்து உண்டாகும் செல்வமும் ஒருகாலத்தில் இல்லாமல் போகும்; இன்னொரு காலத்தில் அதிகமாகும். இந்த உண்மையை உணர்ந்து கொண்டு, ஏழைகளுக்கெல்லாம் அன்னமிட வேண்டும், குடிப்பதற்குத் தண்ணீரும் கொடுக்க வேண்டும். இதனால் அறத்தினைச் சார்பாகக் கொண்டு உள்ளத்தின் தன்மை உயர்ந்து விளங்கும் என்று மனிதர்களை அறச் செயல்கள் செய்ய அறிவுறுத்துகிறார்.

ஆற்றில் நீர்ப்பெருக்கு இல்லாமல்போய், உள்ளங்கால் சுடும் அளவுக்கு வெறும் மணற்பரப்பாகிவிட்ட வறட்சிக் காலத்திலும் ஆறானது, தன்னிடத்து ஊற்றுத் தோண்டினால் நீரைப் பெருகச் செய்து உலகத்தவரின் தாகத்தைத் தணிக்கும். அதைப் போல நல்ல செல்வக்குடியில் பிறந்தவர்கள் தரித்திரமடைந்தவர்களாக ஆனாலும் யாசிப்பவர்களுக்குத் தம் மனமொத்து இல்லையென்று கூறமாட்டார்கள்.

மரம் பழுத்துவிட்டால் வௌவாலை உண்பதற்கு வா என்று கூறி வேண்டி அழைப்பவர்கள் ஒருவரும் அம்மரத்தினிடத்து இல்லை. வௌவால், மரத்தைத் தேடித் தானாக வந்துவிடுகிறது. அதைப் போல், கன்றை ஈன்ற பசுவானது அமுதம் போன்ற பாலைச் சொரிந்து தருவது மாதிரி ஒருவர் தம்மிடத்து உள்ள பொருள்களை மறைக்காமல், இல்லை என்று கேட்பவர்களுக்கு கொடுப்பார்களேயானால் உலகத்தவரெல்லாம் அவரிடத்துத் தாமாக வந்து உறவு கொண்டாடுவார்கள் என்று தானத்தின் சிறப்பினை நயம்பட உரைக்கிறது இந்நூல்.

## தத்துவம்

உண்மையை அறிதல், தன்னை அறிதலே தத்துவம்.

**"ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச்**
**சாவாரை யாரே தவிர்ப்பர்."** **நல்வழி-13**

இவையெல்லாம் அழகிய பூமியின் மீது மாற்ற முடியாத உண்மைகள். நன்மையானதென்றும், தீமையானதென்றும், நானென்றும் நீயென்றும், இல்லையென்றும் உண்டென்றும் கூறுவதாகிய நிலையில்லாமல் வேண்டுதல் வேண்டாமை யற்ற ஞானநிலையே தானே அதுவாகக் கூடிய தத்துவமாகும். இந்தத் தத்துவத்தை உணராதார் மெய்ப்பொருளை வெளியே தேடுவது சம்பு என்னும் புல்லை அறுத்தவர்கள் அதனைக் கட்டுவதற்கு அப்புல்லே உதவும் என அறியாமல் கயிறு தேடிப்போன விதத்தை ஒக்கும். ஒவ்வொரு மனிதனும் விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் தானே கடவுள் என்பதை உணர்ந்து கொள்ளலாம். தானே கடவுளாயிருப்பதை உணராது அதை வெளியே தேடுவது அறிவின்மை என்கிறார் ஔவையார்.

துன்பமாகிய பொருளைப் போடுகின்ற பையாக நமக்குப் பொருந்தியுள்ளது உடம்பு. உயிர்விடும் காலத்தில் இப்பூமியிலேயே விட்டு விடுகின்ற பொய்யாகிய இந்த உடலை நிரந்தரமான உண்மை என்று எண்ணக்கூடாது. யாசிப்பவர்களுக்குக் கொடுக்குமளவுக்குப் பொருள் உண்டாகியிருக்குமானால் விரைந்து தானம் செய்யவேண்டும் என்று மனிதன் தானம் செய்து நல்வாழ்வு வாழ வழிகாட்டுகிறார்.

## வாராதன வாரா

விதி என்பது நிச்சயம், உறுதி என்னும் பொருளைத் தரும். மனிதன் கிடைக்காது என உறுதியாகத் தெரிந்துவிட்ட பொருளுக்காக ஏக்கமுற்று வாடாமல் விதியின் பயன் அவ்வளவுதான் என்று அமைதி பெற வேண்டும். இதனை,

**"வருந்தி அழைத்தாலும் வாராதன வாரா**
**பொருந்துவன போமினென்றால் போகா- இருந்து ஏங்கி**
**நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து**
**துஞ்சுவதே மாந்தர் தொழில்."** **நல்வழி-5**

என்ற பாடலடியில் விளக்குகிறார் ஔவையார்.

பெரிய நிலவுலகத்தில் வாழுகின்றவர் மரணமடைந்தவரை நினைத்து ஆண்டுகள் தோறும் துக்கம் தாளாமல் அழுது புரண்டாலும் மரணமடைந்தவர் திரும்பி உயிருடன் வருவதில்லை. அதனால் துன்புற வேண்டாம். இன்று உயிருடனிருக்கும் மனிதனுக்கும்

அவ்விதம் மரணமடைவதே கடைசி வழி. இதை உணர்ந்து கொண்டு இவ்வுலகைவிட்டுப் போகும் வரை, நமக்கு உரிமையானதாக என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை எனச் சிந்தித்து, நம்மிடம் உள்ளதைப் பிறருக்கும் கொடுத்து நாமும் உண்டு வாழ வேண்டும் என்று நல்வாழ்விற்கான வழிமுறைகளைப் பதிவு செய்துள்ளார்.

**"ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்(டு) ஒன்றாகும்**
**அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**எனை ஆளும் ஈசன் செயல்."** **நல்வழி-27**

மனிதர் வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதைப் பாடல்வழி அறிய முடிகிறது.

## வினைப்பயன்

"செல்வம், கல்வி, நற்பிறப்பு முதலியவற்றைப் பெறுதலும், அவற்றைப் பெறாது இருத்தலும், இன்பமும், துன்பமும், நீடுவாழ்தலும், வாழாமையும் ஆறும் பிறக்கும் முன் கருவில் அமைக்கப்பட்டனவாம். அக்கரு பிறந்தபின் செய்யும் முயற்சி துணைக்காரணமாகும். இம்மைச் செய்வன மறுமைக்கு வித்தாம். வித்தில் மரமும், மரத்தில் வித்தும் தோன்றுதல்போல வினையும் பிறப்பும் ஒன்றற்கொன்று இயைந்து வளர்ந்து வருகின்றன. முற்செய்வினை இப்பிறப்பில் செய்யும் முயற்சிக்குக் காரணமாகி அதன் பயனைத் தரும்"[7] என்கிறார் கு.சுந்தரமூர்த்தி (சுந்தரமூர்த்தி.கு, 1989)

சென்ற பிறவியில் செய்த நல்வினை தீவினைகளே பூவுலகில் பிறவி எடுத்தவர்களுக்குத் துய்ப்பதற்கு என்று சேர்த்து வைக்கப்பட்ட பொருளாகும். எத்தகையவர்களுக்கும் ஒரு செயலை வினைப்பயன் வந்து கூடிய போதில் அல்லாமல், தன் எண்ணப்படி எண்ணி செய்து முடிக்க இயலாது. ஒருவர்க்கு வினைப்பயன்படி, அனுபவிக்க வேண்டியுள்ள சுகத்தினைத் தவிர வேறொருவர் துய்க்கும் சுகங்களைப் பெற விரும்பி முயன்றாலும் அவை கிடைக்காது. பொருளை ஈட்டுவதற்காக ஒருவன் பலவழிகளிலும் எண்ணற்ற முயற்சிகள் செய்தாலும் வினைப்பயன் கூட்டுகின்ற அளவின் படியல்லாமல் அதிகமாகப் பொருள் சேராது. அப்படிச் சேர்ந்த செல்வமும் அவ்வினைப் பயன்படியே நிலைத்திருக்காமலும் போய்விடலாம். அதனால் பொருளாசையை ஒழித்து அற வாழ்வு வாழ வேண்டும் என்கிறார் ஒளவையார்.

**"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்**
**எய்தவருமோ இருநிதியம் - வையத்(து)**
**அறம்பாவம் என்னஅறிந்(து) அன்(று) இடார்க்கின்று**
**வெறும்பானை பொங்குமோமேல்." நல்வழி-7**

இப்படி விதியை வெல்லக் கூடிய மதியைச் சுட்டிக்காட்டுகிறது.

## நேரிய வாழ்க்கை நெறி

யானையின் மீதுபட்டு அதன் உடலை ஊடுருவிச் செல்லும் அம்பானது. பஞ்சு மூட்டையில் பாய முடியாது. நீண்ட இரும்பாலான கடப்பாரையால் தாக்கும்போது நெகிழ்ந்து கொடுக்காத கருங்கல் பாறை பசுமையான மரத்தின் மென்மையான வேருக்கு நெகிழ்ந்து கொடுத்து அது ஊடுருவிச் செல்ல வழிவகுக்கும். இவற்றைப் போலவே முறையே வலிமையான ஆண்கள் மென்மையான பெண்களிடம் அடங்கிச் செல்வர்; கடுஞ்சொற்கள் சாதிக்க முடியாததை மென்மையான இனிய சொற்கள் சாதித்துவிடும்!

மனிதன் வரவுக்கு மேல் செலவு செய்யும்போது கடன் வாங்க வேண்டிய கட்டாயம் உருவாகிறது. கடன் வாங்குவதால் மானம் அழிகிறது. மானம் அழிவதால் உறுதித்தன்மை குலைந்து அறிவு கெடுகிறது. இப்படி இவன் கடன் கேட்பவனாக எவ்விடத்துக்கும் செல்லுவதால் இவனை ஒருதிருடனைப் போலவே அங்குள்ளோர் பார்க்கின்றனர். கடனாளியாகி, நெறி பிறழ்வதால் தீயவனாக நேரிடுகிறது.

இப்படித்தீமையின் ஒட்டுமொத்த உருவமாக மாறும் இவனை நல்லவர்களும் வெறுக்க ஆரம்பித்து விடுகின்றனர். ஆதலால் வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

**"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்**
**எண்பது கோடிநினைந்(து) எண்ணுவன - கண்புதைந்த**
**மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்**
**சாந்துணையும் சஞ்சலமே தான்." நல்வழி-28**

மண்ணினால் செய்யப்பட்ட பாண்டம் எந்த வேளையிலும் உடைந்து விடக் கூடியதாய் உள்ளதைப் போல் மனிதர்களும் எந்த வேளையிலும் துன்பத்திற்குள் தம்மை ஆட்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாய் உள்ளனர்.

## முடிவுரை

நல்லொழுக்கத்தையும் நற்பண்பையும் ஒவ்வொருவரும் என்றென்றும் தங்களுக்கு உடைமையாகக் கொள்ள வேண்டும். உழவுத் தொழில் செய்து வாழ்க்கை நடத்துபவர்தான் உண்மையான மேம்பாடு உடையவராவர். சொல்லரும் துன்பங்களைத் தரும் பசிப்பிணியைப் போக்குவோரின் புகழ் சொல்லில் அடங்காது. பொருளுடையவர் அதன் பயனைப் பெற வேண்டுமாயின் பசியால் வாடுவோருக்குப் பொருளை வழங்கி அனைவரும் உண்டு பசி நீங்குமாறு செய்தல் வேண்டும். மனிதன் தன்னோடு மறுமையிலும் தொடர்ந்து வரக்கூடிய துணை ஒன்றைப் பெற வேண்டுமானால் அறச் செயல்களைச் செய்ய வேண்டும். ஊழ்வினைப்பயனை உணர்ந்து வாழ்ந்தால் வாழ்வில் அமைதி கிட்டும். நல்வினை ஆக்கத்தைக் கொடுக்கும், தீவினை அழிவைத்தரும். ஆதலால் தீய செயல்களை விடுத்து நற்செயல்களைச் செய்து வாழ வேண்டும் என்பன போன்ற வாழ்வியல் நெறிகளை ஔவையாரின் நல்வழி நூல் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. காலந்தோறும் இலக்கியப் படைப்புக்களை உருவாக்கி வரும் இயங்கியல் மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது என்பதற்கு இதுவே சான்றாகும்.

## துணைநூற்பட்டியல்


1. எம் ஏ, மாருதி தாசன். *நர்மதாவின் தமிழ் அகராதி*. சென்னை, நர்மதா பதிப்பகம், 2002.
2. அ மா, பரிமணம், பதிப்பாசிரியர். *வாழ்வியற் களஞ்சியம். தொகுதி பதின்மூன்று*. தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு, முதற்பதிப்பு, 1994.
3. சு அ, இராமசாமிப் புலவர், உரையாசிரியர். *திருவள்ளுவநாயனார்*. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 1970.
4. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். *சிறுபாணாற்றுப்படை*. சென்னை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், முதற்பதிப்பு, 1953.
5. ஔவையார். *நல்வழி, நீதிநூல் களஞ்சியம்*. கொற்றவை வெளியீடு, 2016.
6. வ சுப, மாணிக்கம் (உரை ஆசிரியர்). *ஏழிளந்தமிழ் நீதி நூல்கள்*. சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 2012.
7. சீத்தலைச் சாத்தனார். *மணிமேகலை*. உமா பதிப்பகம், நான்காம் பதிப்பு, 2010.

## REFERENCES


1. M A, Maruthi Dasan. *Narumatha's Tamil Dictionary*. Chennai, Narumatha Publications, 2002.
2. A M, Parmanam, Editor. *Vaazhviya Kalanjiyam*, Volume 13. Thanjavur, Tamil University Press, First Edition, 1994.
3. S A, Ramasamy Pulavar, Text Editor. *Thiruvalluvanayanar*. Chennai, Saiva Siddhanta Publishing House Limited, 1970.
4. Idhaikkali Nadu Nallur Naththathanar. *Sirupanatruppadai*. Chennai, Saiva Siddhanta Publishing House, First Edition, 1953.
5. Auvaiyar. Nalvazhi, *Neethi Nool Kalanjiyam*. Kotravai Publications, 2016.
6. V S, Manickam, Editor. *Ezilanthamizh Neethi Noolgal*. Chennai, Manivasagar Publications, 2012.
7. Seethalai Saathanaar. *Manimekalai*. Uma Publications, Fourth Edition, 2010.